# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1705/9 - 2011 මැයි 10 වැනි අඟහරුවාදා - 2011.05.10

1705/9 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு மே மாதம் 10 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின்படி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்த்தன ஆகிய நான், இச்சபையின் நுவரெலியா மாவட்ட குழும நீர் வழங்கல் செயற் திட்டத்தின் கினிஹத்ஹேன நீர் வழங்கல் திட்ட பொறுப்பதிகாரி அலுவலகத்திற்கான நுழை பாதை அமைப்பது தொடர்பாக காணித்துண்டொன்று தேவைப்படுவதனால், கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையா சொத்துக்களின் உரிமைக் கொள்ளலை இக்கட்டளை மூலம் அங்கீகரிக்கின்றேன்.*

தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்த்தன,
நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர்.

நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு,
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை, பத்தரமுல்லை,
2011, ஏப்பிறல் 27.
5/2/1/925.

**அட்டவணை**

நுவரெலியா மாவட்டம், அம்பகமுவ கோரளை பிரதேச செயலாளர் பிரிவில், இல. 315 A கினிஹத்ஹேன கிராம அலுவலர் பிரிவின், கினிஹத்ஹேன எனும் கிராமத்தில் அமைந்துள்ள, பவலமலே வத்தை எனும் காணியில் அதிகாரமளிக்கப்பட்ட நில அளவையியலாளர் திரு. பி. ஞானப்பிரகாசம் அவர்களினால் தயாரிக்கப்பட்ட இல. 9815 ஐக் கொண்ட துண்டு இல. 01 என காட்டப்பட்டுள்ள முழு விஸ்தீரணத்தில், சுமார் 3.57 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளைக் கொண்ட காணித்துண்டு :-

வடக்கு : நெடுஞ்சாலை;
கிழக்கு : தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்குச் சொந்தமான காணி மற்றும் நுழைபாதையின் ஒரு பகுதி ;
தெற்கு : இதே காணியின் எஞ்சிய பகுதி ;
மேற்கு : வீடுகளுக்குச் செல்லும் பாதை.

உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி : திரு. கே. கே. சந்திரதாச,
சந்தன பண்டாரநாயக்க மாவத்தை,
கினிஹத்ஹேன.

5 - 566